கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

<u>அமர்வு வழக்கு எண்.</u> **257/2014**

<u>அ.சா.**1**</u>

| | | | |
|---|---|---|---|
| பெயர் | யுவராஜ் | சாதி | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுக்கா | | வயது | |
| மாவட்டம் | | தேதி | 09.03.2022 |

(09.03.2022) இன்று 1963 ம் ஆண்டு சட்டம் 44 ன் படி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் புதுவை மாநிலம், சோரப்பட்டு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வழக்கறிஞர் தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பாலையா என் தகப்பனார். என் அப்பா விவசாய வேலை செய்து கொண்டியிருந்தார். அதனுடன் புதுவை மாநில முன்னேற்ற காங்கிரஸ் கட்சியில் மாநில செயலாளராக இருந்து வந்தார். சோரப்பட்டை சேர்ந்த ஆஜர் எதிரி மகேந்திரனை தெரியும். அவருக்கும், என் அப்பாவிற்கும் கட்சி சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது. கடந்த 09.09.2009 ம் தேதி இரவு சுமார் 10.20 மணிக்கு நான் பணிமுடித்து பாண்டிச்சேரியில் இருந்து ஊருக்கு வருவதாக வந்துகொண்டியிருந்த போது என் மாமா பரமசிவம் என்பவர் செல்போன் மூலமாக என் அப்பாவை வெல்லாங்குலம் ஆலமரம் அருகே பூர்ணசந்திரன் கரும்பு தோட்டத்திற்கு பக்கத்தில் யாரோ வெட்டி கொலை செய்துவிட்டார்கள் என்று சொன்னார். நான் உடனே சம்பவயிடத்திற்கு வந்து பார்த்தேன். சம்பவயிடத்தில் என் அப்பா ரத்தவெல்லத்தில் இறந்துகிடந்தார். என் அப்பாவிற்கு இடது கையில் வெட்டு காயமும், கழுத்திலும், இடது காதுக்கு கீழேயும், மேலேயும் வெட்டுகாயங்கள் இருந்தது. என்னுடன் மற்றும் சிலரும் அங்கு இருந்து பார்த்தார்கள். சம்பவயிடத்தில் 2 செல்போன்கள் இருந்ததை பார்த்தேன். தரையில் ரத்தக்கரைகள் இருந்தன. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. அதன் பிறகு போலீசார் சம்பவயிடம் சென்று அங்கியிருந்த செல்போனை ஆய்வு செய்ததில் சோரப்பட்டை சேர்ந்த தமிழ்வாணன் மற்றும் பூபாலன் ஆகியோர்களின் செல்போன்கள் என்று போலீசார் சொன்னார்கள். ஆஜர் 1 ம் எதிரி தமிழ்வாணனை எனக்கு தெரியும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

அ.சா.ஆ.1 புகாரை நான் தான் கைப்பட எழுதினேன். என் மாமா பரமசிவம் என் அப்பாவின் பிரேதத்தை எப்போது பார்த்தார் என்று என்னிடம் குறிப்பிட்டு சொல்லவில்லை. ஆனால் என் அப்பா இறந்துவிட்டதாக இரவு 10.20 மணிக்கு தகவல் கிடைத்தது. அப்போது நான் வீட்டிற்கு செல்வதற்காக அம்மனகுப்பம் கிராமம் அருகில் வந்துகொண்டியிருந்தேன். நான் முதலில் அப்பாவின் பிரேதத்தை இரவு 10.30 மணிக்கு பார்த்தேன். தகவல் கிடைத்ததாக சொல்லுவதிலிருந்து 10 நிமிடத்தில் சென்றுவிட்டேன். சம்பவகாலத்தில் நான் சட்டக்கல்லூரியில் படித்துகொண்டியிருந்தேன். அ.சா.ஆ.1 புகாரை நான் இரவு 12.00 மணியளவில் கொடுத்துவிட்டேன். புகாரில் என் தகப்பனார் இறந்துகிடந்த இடத்தில் செல்போன்கள் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகாரில் என் தகப்பனாருக்கும், ஆஜர் எதிரி மகேந்திரனுக்கும் முன்விரோதம் இருந்தது என்றும், புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை புகார் கொடுத்ததாக சொல்லுவதற்கு மறுநாள் விசாரித்தார்கள். அவ்வாறு விசாரித்ததாக சொல்லும் நேரம் ஞாபகம்இல்லை. என் அப்பா விவசாயம் பார்த்ததாக சொல்லும் நிலம் பாண்டிச்சேரியை சேர்ந்த வழக்கறிஞர் இன்னாஸ்மோரிஸ் என்பவருக்கு சொந்தமானது. அந்த வழக்கறிஞர் தான் நிலத்தை பராமரிக்கும்படி சொல்லியிருந்தார். அந்த நிலம் சம்மந்தமாக என் அப்பாவிற்கும் வழக்கறிஞர் இன்னாஸ்மோரிசுக்கும் வழக்கு நடந்தது என்றால் சரியல்ல. தற்போது அந்த நிலத்தை நான் தான் வழக்கறிஞர் இன்னாஸ்மோரிஸ் அனுமதியின் பேரில் பராமரித்து வருகிறேன். நான் தவறாக சொல்லுகிறேன் என்றாலும், அந்த நிலம் சம்மந்தமாக என் அப்பாவிற்கும், வழக்கறிஞர் வழக்கறிஞர் இன்னாஸ்மோரிசுக்கும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வரை வழக்கு நடைபெற்றது என்றாலும், அந்த விபரம் எனக்கு தெரியும் என்றாலும் அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லுவது போல் 9ம் எதிரி மகேந்திரனுக்கும், என் அப்பாவிற்கும் முன்விரோதம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த நிலம் சம்மந்தமாக இருந்த பிரச்சனையை மறைத்து பிறர் தூண்டிவிட்டதை வைத்து மகேந்திரனுக்கும், என் அப்பாவிற்கும் முன்விரோதம் இருந்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. மகேந்திரனுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண். **257/2014**

அ.சா.**2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வசந்தகுமாரி | சாதி | |
| க/பெ. | பாலையா | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுக்கா | | வயது | |
| மாவட்டம் | | தேதி | 09.03.2022 |

(09.03.2022) இன்று 1963ம் ஆண்டு சட்டம் 44ன் படி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் ஆண்டிப்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். வீட்டுகுடுத்தனம் செய்துவருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பாலையா என் கணவர். அ.சா.1 என் மகன். சோரப்பட்டு கிராமத்தில் உள்ள ரைஸ்மில்லில் கணக்குபிள்ளையாக வேலை பார்த்தார். விவசாயம் செய்துவந்தார். மேலும், புதுவை மாநில முன்னேற்ற காங்கிரஸ் கட்சியில் மாநில செயலாளராக இருந்தார். 09.09.2009ம் தேதி இரவு சுமார் 10.00 மணிக்கு மேல் நாங்கள் வீட்டில் இருந்தோம். என்னுடைய தம்பி பரமசிவம் என்பவர் என்னிடம் மாமா பாலையாவை பூரணசந்திரன் கரும்பு நிலத்திற்கு அருகில் யாரோ வெட்டிப்போட்டுவிட்டதாக சொன்னார். நாங்கள் உடனே அங்கு சென்று பார்த்தோம். சம்பவயிடத்தில் என் கணவர் ரத்தவெல்லத்தில் இறந்துகிடந்தார். என் கணவரின் இடது கையில் வெட்டு காயமும், கழுத்திலும், இடது காதுக்கு கீழேயும், மேலேயும் வெட்டுகாயங்கள் இருந்தது. என்னுடன் மற்றும் சிலரும் அங்கு இருந்து பார்த்தார்கள். அ.சா.1 என் மகனும் அங்கு வந்து பார்த்தார். சம்பவயிடத்தில் 2 செல்போன்கள் இருந்ததை பார்த்தேன். தரையில் ரத்தக்கரைகள் இருந்தன. இந்த வழக்கு சம்மந்தமாக அ.சா.1 மகன் புகார் கொடுத்தார். அதன் பிறகு போலீசார் வந்தார்கள். இது சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நாங்கள் சம்பவத்தின் போது டி.ஆண்டிப்பாளையத்தில் வசித்து வந்தோம். சோரப்பட்டு கிராமத்தில் உள்ள இன்னாஸ்மோரிஸ் என்பவருக்கு சொந்தமான ரைஸ்மில்லில் என் கணவர் வேலை பார்த்து வந்தார். அதேபோல் இன்னாஸ்மோரிசுக்கு சொந்தமான நிலத்தையும் பராமரித்து வந்தார் என்றால் சரிதான். டி.ஆண்டிப்பாளையத்திற்கும், சோரப்பட்டு கிராமத்திற்கும் சுமார் 1.1/2 கி.மீட்டர் தூரம் இருக்கும். என்னுடைய தம்பி பரமசிவம் என் வீட்டிற்கு வந்து என் கணவர் வெட்டு பட்டு சடலமாக கிடக்கிறார் என்று சொன்னார். அப்போது அ.சா.1 என்னுடன் இல்லை. என் கணவர் ரைஸ்மில் வேலைக்கு

விடியற்காலை 5.30 மணியளவில் சென்று திரும்ப வீட்டிற்கு வர இரவு 10.30, 11.00 மணி ஆகும். சோரப்பட்டு கிராமத்தில் உள்ள ரைஸ்மில்லில் முத்துலட்சுமி என்பவர் கூலி வேலை செய்து வந்தார். முத்துலட்சுமி என்பவர் ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்தவர். அந்த முத்துலட்சுமி என்பவருக்கும், என் கணவருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று சொன்னால் சரியல்ல. ரைஸ்மில்லில் வேலை பார்த்ததில் பழக்கம். வழக்கறிஞர் இன்னாஸ்மோரிசுக்கும், என் கணவருக்கும் எந்தவித பிரச்சனையும் இல்லை. வழக்கறிஞர் இன்னாஸ்மோரிஸ் 6 வருடத்திற்கு முன்பு வந்து பார்த்துவிட்டு சென்றார். அதன் பிறகு இந்த வருடம் ஜனவரி மாதம் வந்து பார்த்துவிட்டு சென்றார். வழக்கறிஞர் இன்னாஸ்மோரிசுக்கு சொந்தமான நிலத்தில் வரும் வருமானத்தை நாங்களே வைத்துகொள்வோம். இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றாலும், வழக்கறிஞர் இன்னாஸ்மோரிசுக்கும், என் கணவருக்கும் உள்ள விரோதம் காரணமாக யாரோ செய்த கொலையை எதிரிகள் செய்ததாக சொல்லி வருகிறோம் என்றால் சரியல்ல.

Sd./-Tr.M.Chenkamalaselvan, B.L.,
Additional District Court(FTC),
Villupuram.